**சார்பு நீதிமன்றம்,திருத்துறைப்பூண்டி**

**MCOP. 219/2023**

நாள் 23.01.2025

**<u>இ.ம.எண். 3/2024 மனு உத்தரவின் பெயரில் ம.சா.1. மீண்டும் அழைத்து எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

விபத்து எப்போது ஏற்பட்டது என்றால் 25.01.2017ல். எந்த இடத்தில் விபத்து நடந்து என்றால் சிங்காளந்தி கிராமத்திற்கு செல்லும் சாலைக்கு முன்பு ECR சாலையில் நடந்து. எதிர்மனுதாரர் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தின் பதிவெண் தெரியுமா என்றால் TN 50 L 4739. நான் வந்த வாகனம் என்ன வாகனம் என்றால் TVS Appachi இருசக்கர மோட்டார் சைக்கிள். எதிர்மனுதார் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தின் 50 CC என்றால் சரிதான். நான் உட்கார்ந்து வந்த இருசக்கர மோட்டார் வாகனத்தின் CC 110 என்றால் சரிதான். நான் வந்த வாகனத்தின் பதிவெண் தெரியுமா என்றால் தெரியாது. நான் சென்ற இருசக்கர மோட்டார் சைக்கிள் தான் எதிர்மனுதாரர் சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் எதிர்மனுதாரர் Indicator போடமலும், தலைகவசம் அணியாமலும், திடிரென்று சிங்களாந்தி சாலையை கடந்தபோது இந்த விபத்து ஏற்பட்டது. நான் இந்த விபத்து சம்மந்தமாக காவல் நிலையத்தில் கொடுத்த புகாரில் நான் சென்ற இருசக்கர வாகனத்தின் பதிவெண் பற்றி சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எதிர்மனுதாரர் முறையாக சாலை விதிகளை அனுசரித்துதான் இருசக்கர மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்தார் என்றும், நான் சென்ற இருசக்கர மோட்டார் சைக்கிளின் ஓட்டுநர் வேகமாகவும் தலைகவசம் அணியாமலும் வந்து எதிர்மனுதாரர் மீது மோதியதால் அவருக்கு கொடுங்காயம் ஏற்பட்டது என்றும், நான் வந்த இருசக்கர வாகனத்தின் உரிமையாளர் பெயரை சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. விபத்து

சம்மந்தமாக காவல் நிலையத்தில் நான் கொடுத்த புகாரின் மீது மேல்நடவடிக்கை எடுத்தார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் கொடுத்த புகார் மனு தவறானது தகவலை கொடுத்துள்ளதால் அந்த புகாரின் மீது நடவடிக்கை ஏதும் எடுக்காமல் உண்மைக்கு புறம்பான சம்பவம் என விசாணையில் தெரியவந்ததால் அந்த வழக்கை உண்மைக்கு புறம்பான வழக்கு என முடிக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் வந்த இருசக்கர வாகனத்தின் ஓட்டுநரின் கவனக்குறைவால் தான் எதிர்மனுதாரருக்கு விபத்து ஏற்பட்டு காயம் ஏற்பட்டது என்றும், அதனால் எதிர்மனுதாரருக்கு நான் தான் இழப்பீடு கொடுக்க வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகமாக உள்ளது என்றும், நான் கோரியுள்ள இழப்பீடு கிடைக்ககூடியது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

| |
|---|
| Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.<br><br>Subordinate Judge,<br>Thiruthuraipoondi. |

Typed down to my dictaion, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.